**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலைத் துறை**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை**
**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(06.07.2024 முதல் 10.07.2024)**

**அறிக்கை எண் 054/2024** **தேதி.05.07.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 18°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 02.07.24 முதல் 04.07.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 29°செ முதல் 34°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 23°C to 24°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 86 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 56 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14-19 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (02.07.2024 முதல் 04.07.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 10.07.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 02/07 | 03/07 | 04/07 | தேதி | நாள்-1 06/07 | நாள்-2 07/07 | நாள்-3 08/07 | நாள்-4 09/07 | நாள்-5 10/07 |
| 0.1 | 0.0 | 2.0 | மழை (மி.மீ) | 3 | 4 | 2 | 3 | 2 |
| 29 | 34 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 36 | 36 | 36 | 37 |
| 23 | 24 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 26 | 25 | 25 | 25 | 26 |
| 8 | 6 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 6 | 6 | 7 | 7 |
| 86 | 83 | 85 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 71 | 56 | 67 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 40 | 40 | 40 |
| 19 | 18 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 12 | 10 | 12 |
| 230 | 230 | 230 | காற்று வீசும் திசை | 250 | 250 | 270 | 270 | 270 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (06.07.2024 முதல் 10.07.2024)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 36°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **06-07-2024** | 0.9 | 1.0 | 1.5 | 0.8 | 5.3 | 4.1 | 0.5 | 3.5 | 6.4 | 0.3 | 6.3 | 0.3 | 5.1 | 0.7 |
| **07-07-2024** | 3.3 | 5.8 | 2.1 | 0.6 | 1.6 | 2.0 | 2.4 | 0.7 | 1.6 | 0.7 | 1.9 | 1.6 | 1.4 | 3.5 |
| **08-07-2024** | 0.7 | 2.8 | 0.3 | 0.0 | 4.8 | 0.4 | 0.1 | 7.0 | 2.1 | 0.0 | 0.8 | 0.0 | 3.1 | 1.3 |
| **09-07-2024** | 0.0 | 1.0 | 0.1 | 0.0 | 2.3 | 0.4 | 0.0 | 3.4 | 2.0 | 0.0 | 0.9 | 0.0 | 0.9 | 0.9 |
| **10-07-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் 5 நாட்களில் மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தூறல் (அ) லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. மேற்குதொடர்ச்சி மழையினை ஒட்டியுள்ள பகுதிகளில் மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு 10 - 18 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ளவும்.<br>மருந்து தெளிப்பினை காலை நேரங்களிலோ (அ) 3-4 மணிநேரம் மழையில்லாத வானிலை எதிர்பார்க்கப்படும்போது மட்டும் மேற்கொள்ளலாம். |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் அதிவேகக் காற்று மற்றும் லேசான மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும்.<br>கரும்பில் குருத்து மாவுப்பூச்சியையும் பொக்கோ போயங் நோயை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 17.8 SL @ 0.3மில்லி / லிட்டர் + புரபிகோனசோல் @ 25 SC @ 1ml / லிட்டர் தெளிக்கவும். மேலும் நன்கு வளர கரும்பு பூஸ்டரை 1 கிலோ 1.5 கிலோ, 1.5 கிலோ மற்றும் 2 கிலோவை 40, 60 மற்றம் 75 நாட்கள் முறையே ஒரு ஏக்கருக்கு கைதெளிப்பானை கொண்டு தெளிக்கவும். |
| பருத்தி | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி குளிர்கால கம்போடியா பருத்தி விதைப்பிற்கான நிலம் தயாரிக்கவும். விதைப்பினை வரும் ஆகஸ்டு 15ம் தேதிக்குள் முடிக்கவும்.<br>வாடல் நோயை மேலாண்மை செய்ய டிரைக்கோடெர்மா விரிடியை ஒரு ஏக்கருக்க 2.5 கிலோவை 250 கிலோ தொழு உரத்துடன் கலந்து வேர்பகுதியில் இடவும். |
| கொடி பூசணி | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி கொடி பூசணி வகைகளை போதுமான வடிகால் வசதி செய்து விதைக்கவும். |

| | | |
|---|---|---|
| வெங்காயம் | வளர் பருவம் | நிலவும் வானிலையில் வெங்காயத்தில் இலைப்பேன் தாக்குதல் அதிகமாக வாய்ப்புள்ளது. கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு லிட்டர் நீரில் டைமெத்தோயேட் 1மிலி கலந்து தெளிக்கவும்.<br>வெங்காயத்தில் கோழிக்கால் நோயை கட்டுப்படுத்த மேன்கோசெப் + கார்பன்டசிம் கலவையை கிராம் / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| வாழை | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் மணிக்கு 10 -24 கிமீ வரை வேக காற்றினை கருத்தில் கொண்டு 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.<br>வாடல் நோயை மேலாண்மை செய்ய டிரைக்கோடெர்மா விரிடியை ஒரு ஏக்கருக்க 2.5 கிலோவை 250 கிலோ தொழு உரத்துடன் கலந்து வேர்பகுதியில் இடவும். |
| மஞ்சள் | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் சாதகமான வானிலையினைப் பயன்படுத்தி 30 மற்றும் 60 நாட்களுக்கு மேலான மஞ்சளுக்கு ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியாா, 72 கிலோ பொட்டாஷ் உரங்களை மேலுரமாக இடவும்.<br>கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா விரிடியை ஒரு ஏக்கருக்க 2.5 கிலோவை 250 கிலோ தொழு உரத்துடன் கலந்து வேர்பகுதியில் இடவும். |
| கால்நடைகள் | | காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழிகளின் தீவனங்கள் சிதற வாய்ப்புள்ளது. எனவே காற்றின் வேகத்தை குறைக்க கோழிக்கூடாரங்களில் சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிடவும்.<br>வேகமான காற்றினால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சினைப்போக்க கால்நடைகளுக்கு போதிய குளிர்ந்த நீர் அளிக்கவும்.<br>எதிர்பார்க்கப்படும் காற்றின் அதிக ஈரப்பதத்தின் காரணமாக பால் மாடுகளில் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும் மடுவினை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை கொண்டு கழுவி மடுவீக்க நோய் வராமல் தவிர்க்கவும். |

**குறுஞ்செய்தி**

- நிலவும் வானிலையில் வெங்காயத்தில் இலைப்பேன் தாக்குதல் அதிகமாக வர வாய்ப்புள்ளது. கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு லிட்டர் நீரில் டைமெத்தோயேட் 1மிலி கலந்து தெளிக்கவும்

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**